ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1567/6 - 2008 සැප්තැම්බර් 15 වැනි සඳුදා - 2008.09.15

1567/6 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ. 21/78(v).

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய அச்சட்டத்தின் 24அ என்னும் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
2008, ஒகத்து 25.

#### கட்டளைச் சட்டம்

1. இக்கட்டளைச் சட்டம் 2008 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க மானிடவியல் மற்றும் சமூக அறிவியல் உயர் கற்கைகளுக்கான தேசிய நிலைய (திருத்த) க் கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. 2005, ஒற்றோபர் 19 ஆந் திகதிய 1415/17 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2005 ஆம் ஆண்டின் மானிடவியல் மற்றும் சமூக அறிவியல் உயர் கற்கைகளுக்கான தேசிய நிலையக் கட்டளைச் சட்டம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது:-

(1) அக்கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பந்தியில் அதன் (இ) எனும் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுவதன் மூலமும் :-

"(இ) கற்கைச் சபைகள்" ;

(2) அக்கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பந்தியில் அதன் (2) மற்றும் (3) ஆம் உட்பந்திகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுவதன் மூலமும்:-

"(2) (அ) முதுகலைஞர் பேரவை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர், அவர் தவிசாளராதல் வேண்டும் ;

(ii) ஆணைக்குழுவின் தவிசாளர் ;

(iii) முகாமைத்துவப் பேரவையின் தவிசாளர் ;

(iv) தோதான நிலையியற் குழுக்களால் பெயர்குறித்து நியமிக்கப்படும் மானிடவியல் மற்றும் சமூக அறிவியல் துறைகளுக்கு இயைபான பீடங்களின் துறைத் தலைவர்கள் ஆறு (6) பேர் ; அத்துடன்

(v) ஆணைக்குழுவின் கருத்தில், தொடர்புபட்ட அல்லது இயைபான துறைகளில் பிரபல்யத்தை எய்தியுள்ள ஆட்களிடையேயிருந்து ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நான்கு (4) உறுப்பினர்கள்.

(ஆ) தவிசாளர் முதுகலைஞர் பேரவையின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமை தாங்குதல் வேண்டும். ஆயின், தவிசாளர் வருகைதராதபோது ஆணைக்குழுவின் தவிசாளர் பேரவையின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமைதாங்குதல் வேண்டும். முதுகலைஞர் பேரவையின் ஏதேனும் கூட்டத்திற்கு தவிசாளர் அல்லது ஆணைக்குழுவின் தவிசாளர் வருகை தராதபோது சமுகமாகவுள்ள உறுப்பினர்கள் அக்கூட்டத்திற்கு தவிசாளராகச் செயலாற்றுவதற்கென சமுகமாகவுள்ளவர்களிடமிருந்து ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(3) சனாதிபதி நிலையத்தினதும் முதுகலைஞர் பேரவையினதும் போஷகராதல் வேண்டுமென்பதுடன், பேரவை அவ்வாறு செய்வதற்கு அவசியமானபோது சனாதிபதியைச் சந்தித்தலும் வேண்டும்.";

(3) அக்கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் பந்தியில்-

(1) அதன் (3) ஆம் மற்றும் (4) ஆம் உட்பந்திகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுவதன் மூலமும் :-

"(3) முகாமைப் பேரவை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) பணிப்பாளர், அவர் தவிசாளராதல் வேண்டும் ;

(ii) தோதான நிலையியற் குழுக்களினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் மானிடவியல் மற்றும் சமூக அறிவியல் துறைகளுக்கு இயைபான பீடங்களின் துறைத் தலைவர்கள் ஆறு (6) பேர் ; அத்துடன்

(iii) ஆணைக்குழுவின் கருத்தில், தொடர்புப்பட்ட அல்லது இயைபான துறைகளில் பிரபல்யத்தை எய்தியுள்ள ஆட்களிடையேயிருந்து ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நான்கு (4) உறுப்பினர்கள்.

(2) அதன் (6) ஆம் உட்பந்தியில் "நாலிலொன்றாதல்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "மூன்றிலொன்றாதல்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ; அத்துடன்.

(4) 13 ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை பதிலிடுவதன் மூலமும் :-

"13. முதுகலைஞர் பேரவையானது, முகாமைப் பேரவையின் மதியுரைமீது காலத்திற்குக் காலம் கல்விசார் முதுகலைஞர் பேரவைக்கு மதியுரையளிக்கின்ற நோக்கத்திற்கு அவசியமெனக் கருதுகின்றவாறாக கல்விசார் மற்றும் வேறு சபைகளை நியமிக்கலாம்.".

10-21

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.